பருக்கை
பல திருமண நிகழ்ச்சிகளில் கல்லூரி படிக்கும் வயதுள்ள இளைஞர்கள் ஓடியாடி உணவு பரிமாறுவார்கள்.
அப்போதெல்லாம், இவர்கள் கேட்டரிங் நிறுவனத்தில் வேலை பார்க்கும் இளை ஞர்கள் என்று நினைத்திருப்போம்.
வீரபாண்டியனின் ‘பருக்கை’ நாவலைப் படித்த பிறகு அந்த எண்ணமே மாறி விட்டது.
ஒருவேளை நல்ல உணவுக்குக்கூட வழியில்லாமல் அரசு விடுதியில் தங்கி, பகுதி நேரமாக கேட்டரிங் வேலை பார்க்கும் இளைஞர்களின் வலியைப் பதிவு செய்துள்ள நாவல்தான் ‘பருக்கை’.
வீரபாண்டியனின் முதல் நாவல் இது. சென்னை ராயபுரத்தில் உள்ள முதுநிலை மாணவர்கள் அரசு விடுதியை மையப்படுத்தியும், படிப்புக்கு இடையே ஒரு வேளை நல்ல ருசியான உணவுக்காக கேட்டரி வேலைக்கு மாணவர்கள்

சாப்பிட நாக்கில் எச்சில் ஊறுவதையும், கடைசியில் சரிவர உணவு கிடைக்காமல் திண்டாடுவதையும் நாவல் முழுவதும் படரவிட்டிருக்கிறார் ஆசிரியர். இடையிடையே சமூல அவலங்களை நூலில் குறிப்பிட்டுள்ளது வாசிப்புக்கு வலுச் சேர்க்கிறது.

லட்சியங்களைச் சுமந்துகொண்டு சென்னைக்கு வரும் கிராமப்புற ஏழை மாணவர்கள், கைச் செலவுக்குப் பெற்றோரை எதிர்பார்க் காமல், கேட்டரிங் வேலை செய்து தங்கள் கனவை நிறைவேற்றிக்கொள்ள முயல்கிறார்கள் என்பதை அழகாகச் சொல்லியிருக்கிறார். கிராமப்புறங்களில் இருந்து நகரங் களுக்குப் படிக்க வரும் இளைஞர்கள் எதிர்கொள்ளும் பொருளாதார மற்றும் பண்பாட்டுச் சிக்கல்களை இந்நூல் தெளிவாகப் பேசுகிறது. தமிழகத்தில் அரசு விடுதிகள் எப்படிச் செயல்படுகின்றன, அங்குத் தங்கியுள்ள

மாணவர்கள், கைச் செலவுக்குப் பெற்றோரை எதிர்பார்க் காமல், கேட்டரிங் வேலை செய்து தங்கள் கனவை நிறைவேற்றிக்கொள்ள முயல்கிறார்கள் என்பதை அழகாகச் சொல்லியிருக்கிறார். கிராமப்புறங்களில் இருந்து நகரங் களுக்குப் படிக்க வரும் இளைஞர்கள் எதிர்கொள்ளும் பொருளாதார மற்றும் பண்பாட்டுச் சிக்கல்களை இந்நூல் தெளிவாகப் பேசுகிறது. தமிழகத்தில் அரசு விடுதிகள் எப்படிச் செயல்படுகின்றன, அங்குத் தங்கியுள்ள மாணவர்கள் எப்படிக் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர் என்பதற்கு ஒரு பருக்கை உதாரணம் இந்த நாவல். பருக்கை வீரபாண்டியன். பரிசல்

3:41 pm

தனது பருக்கை நாவலுக்காக இந்த ஆண்டு மத்திய அரசின் 'யுவ புரஷ்கார்' விருது பெற்றிருக்கிறார் எழுத்தாளர் வீரபாண்டியன்.

தற்காலத்தில் கல்லூரி மாணவர்களின் வாழ்வியலை, கல்லூரியில் சேருவதற்கு இடம்கிடைத்தும் படிப்பதற்கு விடுதி வசதி இல்லாததை, விடுதி இருந்தும் சரியான உணவு இல்லாதது போன்ற சிக்கலில் சிக்கி, உணவுக்காகவும், தங்களுடைய பணத்தேவைகளுக்காகவும் பகுதிநேரமாக பணிபுரிந்தவாறு படிக்கும் மாணவர்களின் நிலையை பொட்டில் அடித்தாற்போல் சொல்கிறது எழுத்தாளர் வீரபாண்டியன் எழுதிய பருக்கை நாவல்.

மத்திய அரசின் 'யுவபுரஸ்கார்' விருதுபெற்ற மகிழ்ச்சி கொஞ்சமும் குறையாத உணர்வோடு, தேனியில் நடைபெற்ற தமிழ்நாடு முற்போக்கு கலை இலக்கிய மேடையில் பருக்கை நாவல் ஆய்வரங்கத்திற்கு வந்திருந்த எழுத்தாளர் வீரபாண்டியனிடம்

திருவண்ணாமலை பக்கத்துல இருக்குற அந்தலூர்தான் நான் பிறந்த ஊர். இளங்கலை வரைக்கும் மாவட்டத்திற்குள்ளேயே படித்தேன், முதுகலை படிப்பிற்காக சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியத்துறையை தேர்வு செய்தேன். அங்கிருந்துதான் இலக்கியம் பற்றிய புரிதல், புத்தகங்களை படிப்பதன் அவசியம், அதுசார்ந்த பார்வை ஆகியவற்றை அறிந்தேன். கல்லூரியில் நடக்கும் ஆய்வரங்குகள், இலக்கியம் குறித்த ஆர்வத்தை பெரிதும் தூண்டியது. அதுவரை கவிதைகள் மட்டுமே எழுதியவன், நாவல் எழுதுவதற்கும் தயாரானேன்.

என்னுடைய பாடத்திட்டத்தில் ஆழி சூழ் உலகு, எரியும் பனிக்காடு போன்ற நூல்கள் மக்களின் நீண்ட நெடிய வாழ்வியலை பேசியது. படிக்கும்

பருக்கை என்ற தலைப்பை சூட்டியது ஏன்?

கேட்டரிங்-காகவேதான் பருக்கை என்ற தலைப்பை தேர்வு செய்தேன். நாவலின் உட்கருத்தாக பசி என்ற நிலையை வைத்து, நான் செய்துவந்த வேலையான கேட்டரிங்கையும் சேர்த்தேன். அந்தக் காலத்தில் சமையல் செய்து பரிமாறுவதுதான் கேட்டரிங் என்ற நிலை இருந்தது. அப்போதெல்லாம் காய்கறிகள் வெட்டும் வேலைக்குகூட மாணவர்கள் செல்வார்கள். இன்றெல்லாம் பரிமாறுவதுதான் கேட்டரிங் என்ற நிலை உள்ளது. இதற்கெல்லாம் ஒரு அழுத்தம் கொடுக்கும் முயற்சியாக பருக்கை நாவல் இருக்கும்.

ஆரம்பத்தில் நாவலுக்கு சாம்பார் என்ற பெயரைத்தான் வைத்தேன். எங்கே, அது சமையல் குறிப்பு சம்பந்தமான புத்தகமாக ஆகிவிடுமோ என்ற

பருக்கைக்கு அங்கீகாரம் கிடைக்குமென நினைத்தேன். சமூக கண்ணோட்டத்தோடு, நிகழ்கால உண்மையை சொன்னதால் நல்ல எதிர்பார்ப்பை பெறும் என்ற நம்பிக்கையும் இருந்தது. என்னுடைய முதல் நாவலே பருக்கைதான். இந்த வருடம் ஒரு கவிதை தொகுப்பும், சிறுகதையும் வெளியிடலாம் என நினைக்கிறேன். பருக்கை நாவலுக்கு “யுவ புரஸ்கார்” விருது கிடைத்தது மிகவும் மகிழ்ச்சி.

பகுதிநேர வேலைக்கு சென்று படிக்கும் நிலை தொடர்வதற்கு மாற்றாக என்னென்ன முயற்சிகளை முன்வைக்கிறீர்கள் நீங்கள்?

கிராமப்புறங்களிலிருந்து படிப்பதற்காக நகர்புறங்களை நோக்கிவரும் மாணவர்களுக்கு முறையான சாப்பாடு, விடுதி வசதிகளை ஏற்படுத்தினாலே

விடுதி மாணவர்களின் பசியை பேசும் 'பருக்கை'!

மத்திய பல்கலைக்கழகங்கள் கொடுப்பது போல உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகை ஏதாவது கொடுக்கலாம். ஆதலால் பெரும்பாலான மாணவர்கள் உயர்கல்விக்காக மத்திய பல்கலைக்கழகங்களை நாடுகிறார்கள். இந்த உலகத்தில் எல்லா தேவைகளுக்கும் பணம்தான் பிரதானம் என்ற நிலையிலேயே, படிக்கும் மாணவர்கள் அதே எண்ணத்திலேதான் வெளியேறுகிறார்கள். அவர்களால்தான் அடுத்து வரும் சமுதாயமும் கட்டமைக்கப்படும். மாணவர்களின் அத்தகைய எண்ணத்தை மாற்றியமைக்க வகையிலாவது அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யலாம்.

இன்றைய மாணவர்களிடம்

நினைக்கிறீர்களா?

இந்த மாணவர்களின் பிரச்னைகளை முழுமையாக பேசுகிற நாவலாக என்னுடைய நாவல் இருக்கும். இன்றைக்கு தங்களது பிரச்னையை எடுத்து அவர்கள் போராடும் சமயத்தில், அது குறித்த பார்வையே நாவலாக வந்திருப்பது அவர்களுக்கு ஆச்சரியமளிக்கலாம். இன்னும் சில கல்லூரிகளில் சமூக ரீதியான விடுதிகள் இருக்கின்றன. ஒரு விடுதியில் இன்னொரு விடுதியை சேர்ந்த மாணவர்கள் தங்கக்கூடாது என்பதெல்லாம் இருக்கின்றன.

இத்தகைய நிலைகளை தவிர்த்து ஒரு கல்லூரி ஒரு விடுதி என்ற நிலை இருந்தால் எதிர்கால தலைமுறையை கட்டமைக்கப்போகிற இளைஞர்களின் சிந்தனையை அது இன்னும் ஆரோக்கியமானதாக ஆக்கும்.